அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 19/2016(I)

எனது இல : EST–3/POLIC/04/0051

அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2017.04.25

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத்த தலைவர்கள்

**<u>தேர்தல்களில் தோற்றுவதற்காக அரசாங்க சேவையில் இருந்து விலகிய அரசியல் ரீதியான உரிமைகளை இழந்த அலுவலர்களை மீளச் சேவையில் அமர்த்துதல்</u>**

தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 1:3 உப பிரிவுக்கு 1:3:1 உப பிரிவை உள்ளடக்கி வெளியிடப்பட்ட 2016.08.08 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 19/2016 தொடர்பில் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச்சுற்றறிக்கயை கிழே காட்டபட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இரத்துச் செய்வதற்கு 2017.03.21 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

I. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 19/2016 இன் பிரகாரம் 2017.03.21 ஆம் திகதி வரை எடுக்கப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கைக்களுக்கும் பாதிப்பேற்படாத வகையில், அன்று தொடக்கம் செயற்படும் வண்ணம் அச்சுற்றறிக்கையை இரத்து செய்தல்.

II. அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 19/2016 இன் ஏற்பாடுகளுக்கமை மீளச்சேவையில் அமர்த்தப்பட்ட அரசாங்க உத்தயோகத்தர்களின் சம்பளத்தினை, தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 6:5 உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தீர்மானித்தல்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிறி

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு